## இரண்டாவது அடிப்படை அம்சம்: தவா:ப்

இந்தத் தவாஃப் **தவா:ப் இ:பாஜ்தா** அல்லது **தவா:ப் ஜ்ஸியாரஹ்** எனப்படும். ஃகுர்பானி கொடுக்கும் நாள் வரையிலும் ஒருவர் இந்த ஜ்ஸியாரத் செய்ய முடியாமல் போனாலும், இதனைச் செய்வது கட்டாயமானது என்ற வகையில், அவர் திரும்பி வந்து இந்த தவாஃபை நிறைவேற்றவேண்டும். ஏதோ ஒரு காரணத்தினால் இதனை நிறைவேற்றாமலேயே தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டாலும், அவர் வசதிக்கேற்ப திரும்பி வந்து இதனை நிறைவேற்றவேண்டும், இல்லையெனில், அவருடைய ஹஜ் நிறைவேறாதுபோகும்.

### தவா:பின் விதிகள்

1 **நிய்யத்**

2 **சாதாரண மற்றும் கட்டாயம் நீக்கவேண்டிய அசுத்தத்திலிருந்து தூய்மை பெறுதல்.** ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத் தூதர் ﷺ அவர்கள் மக்காஹ்விற்கு வந்தபோது முதலில் அவர்கள் உதூ செய்தார்கள் அதன்பின் கஅபாவின் தவாஃப் செய்தார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

3 **மறைக்கவேண்டிய அளவிற்கு உடலை மறைத்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَنْ لاَ يَحُجَّ بَعْدَ العَامِ مُشْرِكٌ وَلاَ يَطُوفَ بِالْبَيْتِ عُرْيَانٌ

*பொருள்: இந்த ஆண்டிற்குப் (ஹஜ்ஜதுல் வதாவிற்கு முன்) பிறகு எந்த இணை வைப்பாளனும் ஹஜ் நிறைவேற்றுவதற்காக இங்கே வரக்கூடாது, எவரும் கஅபாவின் தவாஃப் நிர்வாணமான நிலையில் செய்யக்கூடாது.*

4 **ஒரு தவா:ப் கஅபாவைச் சுற்றி ஏழு சுற்றுக்கள் வருவதாகும்.** எவருக்கும் சுற்றுக்களின் எண்ணிக்கையில் சந்தேகம் வந்துவிட்டால், குறைந்த அளவையே கணக்கில் எடுத்துக்கொண்டு ஏழு சுற்றுக்களைப் பூர்த்தி செய்யவேண்டும்.

5 **தவா:ப் ஹஜருல் அஸ்வதிலிருந்து துவங்கவேண்டும், சுற்று அங்கேயே வந்து முடிக்கவேண்டும்,**

6 **கஅபா தனக்கு இடது புறமாக இருக்கும் வகையில் தவா:ப் நிறைவேற்ற வேண்டும்** ஹஜ்ரத் ஜாபிர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்

www.uzairfalahi.com

தூதர் ﷺ அவர்கள் மக்காஹ்விற்கு வந்தபோது, ஹஜருல் அஸ்வதிற்கு அருகில் வந்தார்கள், அதனை முத்தமிட்டார்கள், வலது புறமாகத் திரும்பி (தவாஃபிற்காக) முற்பட்டார்கள். முதல் மூன்று சுற்றுக்கள் வேகமாகச் சென்றார்கள் (ரமல் செய்தார்கள்) மற்றச் சுற்றுக்களை சாதாரணமாகவே நடந்துசென்றார்கள் (முஸ்லிம்).

7 **தவா:ப் கஅபதுல்லாஹ்வைச் சுற்றி வெளிப்புறமாகவே செய்யப்படவேண்டும்,** அதன் உட்புறமாகச் செய்யக்கூடாது.

8 **ஏழு சுற்றுக்களும் தொடர்ச்சியாகச் செய்யப்படவேண்டும்** விட்டுவிட்டு செய்து முடிக்கக்கூடாது.

## தவா:பின் சுன்னத்துகள்

1 **தவா:ப் ஹஜருல் அஸ்வதிற்கு முத்தமிட்டுத் துவங்குதல்** முத்தமிடுவது இயலாதுபோனால், அதனைத் தொடுவது அல்லது தூரத்திலிருந்தே சைகை செய்துகொள்வது போதுமானது. அப்போது بِسْمِ اللهِ وَاللهُ أَكْبَرُ என்று சொல்லவேண்டும்.

2 **முதல் மூன்று சுற்றுக்களில் ரமல் செய்தல்** (ரமல் என்பது சாதாரண நடையைவிட சற்று வேகமாகவும் தோளைஉயர்த்தி வேக நடைபோடுதல்), மீதியுள்ள நான்கு சுற்றுக்கள் சாதாரணமாக நடந்து செல்லவேண்டும்.

3 **கஅபதுல்லாஹ்விற்கு நெருங்கியே இருக்கவேண்டும்** ஏனெனில், ஹஜருல் அஸ்வதிற்கு முத்தமிடுதல் மற்றும் இஸ்திலாம் செய்வது எளிதானதாக இருக்கும்.

4 **சுன்னத்தான துஆக்களை ஓதுதல்**

5 **ஏழு சுற்றுக்களையும் தொடர்ந்து கால இடைவெளியின்றி நிறைவேற்றுதல்**

6 **இஸ்திபாங்க் செய்தல்** அதாவது, போர்வையை வலது புறத்தோள் தெரியும் வகையில் போர்த்திக்கொண்டு, அதன் நடுப்பகுதி வலதுபுறமாக அக்குளுக்குக் கீழிருந்து எடுத்து இடதுபுறத் தோளின்மீது போட்டுக்கொள்ளவேண்டும், இதனால் தவாஃப் செய்வது எளிதாக இருக்கும் (இது ஆண்களுக்கு மட்டும், பெண்களுக்கு அல்ல)

7 **தவா:ப் செய்துமுடித்தபின் இரண்டு ரகஅத்துக்கள் ந:பில் தொழுகை நிறைவேற்றுதல்** இத்தொழுகையில் முதல் ரகஅத்தில் சூரா காஃபிரூன் மற்றும் இரண்டாவது ரகஅத்தில் சூரா இக்ஹ்லாஸ் ஓதவேண்டும். இயலுமானால் இத்தொழுகையை மஃகாமு இப்ராஹீமுக்குப் பின்புறமாக

www.uzarfalahi.com

தொழவேண்டும், இல்லையெனில் ஹரமுக்குள் எங்கும் தொழுது கொள்ளலாம்.

8 **தவா:ப் செய்துமுடித்தபின் ஜ்ஸம் ஜ்ஸம் தண்ணீர் குடித்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் ஜ்ஸம் ஜ்ஸம் தண்ணீரைக் குடித்தார்கள், பின்பு கூறினார்கள் இது பரக்கத் (அருள்) மிக்கதாகும் மற்றும் பசியுடனிருப்பவருக்கு இதுவே உணவாகும்.(முஸ்லிம்). ஹஜ் செய்பவர்கள் இந்த ஜ்ஸம் ஜ்ஸம் தண்ணீரை உலக மற்றும் மறுமையின் எந்த ஒரு நலனையும் அடைவதற்கான நிய்யத்துடன் (எண்ணத்துடன்) குடிக்கவேண்டும், ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: **مَآءُ زَمْزَم لِمَاشُرِبَ لَهُ** *எந்த நிய்யத்துடன் ஜ்ஸம் ஜ்ஸம் தண்ணீர் குடிப்பார்களோ அது நிறைவேறும்* (அஹ்மத், இப்னு மாஜா). ஒரு நோயாளி தான் நோய் நிவாரணம்பெற்று ஆரோக்கியமடையவேண்டும் என்ற எண்ணத்துடன் குடிப்பாரேயானால், அல்லாஹ் அவருடைய துஆவை ஏற்றுக் கொள்கிறான். சிறந்தது யாதெனில், இதனை மூன்று மூச்சுக்களில் குடிக்கவேண்டும், குடிக்ககும்போது ஃகிப்லாவின் திசையை நோக்கி இருக்கவேண்டும் மற்றும் வயிறு நிறைந்துவிடும் அளவிற்குக் குடிக்க வேண்டும், குடித்தபின் அல்ஹம்துலில்லாஹ் சொல்லிதான் விரும்பியவற்றை அல்லாஹ்விடம் கேட்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்தத் துஆவைக் கேட்பார்கள்:

**أَللّٰهُمَّ أَسْأَلُكَ عِلْماً نَافِعاً، وَرِزْقاً وَاسِعاً، وَشِفَآءً مِنْ كُلِّ دَاءٍ**

*இறைவா, நான் உன்னிடம் பயனுள்ள கல்வியறிவையும், வளமான செல்வத்தையும் அனைத்து நோய்களிலிருந்தும் நிவாரணத்தையும் எனக்கு அளிக்குமாறு கேட்கின்றேன்.*

* * *

www.uzairfalahi.com